## வேலூர் மத்திய சிறை கண்காணிப்பாளர் செயல்முறை ஆணைகள்
## முன்னிலை - திருமதி.V.ருக்மணி பிரியதர்ஷினி B.A.B.L

எண்.8179/பொ.1/2014 நாள்.03.02.2021

பொருள்:- சிறைகள், மத்திய சிறை, வேலூர் - செல்வி.R.பிரியதர்ஷினி, சிப்ப எழுத்தர் என்பவர் தினசரி நாளிதழ் மூலம் விளம்பரம் செய்யப்பட்டு தேர்வு செய்யப்பட்டு இச்சிறையில் சிப்ப எழுத்தராகப் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருவது - பணிவரன் முறை செய்து ஆணை பிறப்பித்தல் - குறித்து.

பார்வை:- 1) கூடுதல் காவல் துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவரின் குறிப்பாணை எண்.34511/ இ.எஸ்.2/2019 நாள்.26.09.2019.

2) வேலூர், மத்திய சிறை, கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை எண்.8179 / பொ.1/ 2014, நாள்.09.11.2019.

----------

வேலூர், மத்திய சிறையில் காலியாக இருந்த சிப்ப எழுத்தர் பணியிடத்தை நிரப்பிட பார்வை (1)-ல் காணும் கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவரின் குறிப்பாணையின் மூலம் ஆணையிடப்பட்டதை தொடர்ந்து பார்வை (2) - ல் காணும் வேலூர் மத்திய சிறைக் கண்காணிப்பாளரின் செயல் முறை ஆணையின்படி செல்வி.R.பிரியதர்ஷினி, என்பவர் தற்காலிக சிப்ப எழுத்தராக பணி நியமனம் பெற்று 09.11.2019 மு.ப முதல் பணிக்கு ஆஜராகி பணிபுரிந்து வருகிறார்.

2] செல்வி.R.பிரியதர்ஷினி, சிப்ப எழுத்தர் என்பவரின் கல்வி சான்றிதழ் மற்றும் வகுப்பு சான்றிதழ் ஆகியவைகள் உண்மை தன்மையுடையது என கடிதம் பெறப்பட்டுள்ளது. எனவே, செல்வி.R.பிரியதர்ஷினி, சிப்ப எழுத்தர் என்பவர் பணியில் சேர்ந்த நாளான 09.11.2019 மு.ப முதல் பணி வரன் முறைபடுத்தி ஆணையிடப்படுகிறது.

3] செல்வி.R.பிரியதர்ஷினி, சிப்ப எழுத்தர் என்பவரின் பணி 09.11.2019 முதல் பணி வரன்முறை படுத்தப்பட்டுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணிநூல் விதிகள் விதி எண் 32(a)- ன்படி, மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதி காண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

சிறைக்கண்காணிப்பாளர்,
மத்திய சிறை, வேலூர்.
03/02/2021

பெறுநர்
செல்வி.R.பிரியதர்ஷினி, சிப்ப எழுத்தர், மத்திய சிறை, வேலூர்.

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1) காவல்துறை இயக்குநர் , சிறைகள் மற்றும் சீர்த்திருத்த பணிகள் துறை தலைவர் சென்னை -08
2) சிறைத்துறை துணைத்தலைவர் வேலூர் சரகம், வேலூர்

நகல் - ப.கா.1/பணிப்பதிவேடு/கண்காணிப்பாளர் ஆணைப்புத்தகம்.

D/Manoj/Probational Decl.

**வேலூர் மத்திய சிறை, சிறைக்கண்காணிப்பாளர் (பொ) செயல்முறை ஆணைகள்.**
**முன்னிலை.திரு.ஏ.எஸ்.அப்துல் ரஹ்மான், பி.இ.,**

எண்.3181 / பொ.1/2022 நாள்.06.05.2022

பொருள் - சிறைகள் மற்றும் சீர்த்திருத்தப் பணிகள் துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணி - 2022-2023-ஆம் ஆண்டுக்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு பணி மாற்றல் மூலம் பதவி உயர்வு அளித்து பணியமர்த்தி ஆணை பெறப்பட்டுள்ளது - பதவி உயர்வு வழங்கியது - பணியேற்பு செய்தது - ஆணைப்பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை - 1) காவல்துறை இயக்குநர் / சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநரின் செயல்முறை ஆணைகள் எண்.3719/ES.1/2022-1, நாள்.06.05.2022.

2) காவல்துறை இயக்குநர் / சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநரின் செயல்முறை ஆணைகள் எண்.3719/ES.1/2022-3, நாள்.06.05.2022.

3) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.3181/பொ.1/2022, நாள்.06.05.2022

4)செல்வி.R.பிரியதர்ஷினி, இளநிலை உதவியாளர், மத்திய சிறை, வேலூர் என்பவரின் மனு நாள்.06.05.2022

----------

வேலூர் மத்திய சிறை கண்காணிப்பாளரால் (பொ) பின்வருமாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2] பார்வை (3)-ல் காணும் இவ்லுவலக செயல்முறை ஆணையின்படி செல்வி.ரா.பிரியதர்ஷினி, சிப்ப எழுத்தர், மத்திய சிறை, வேலூர் என்பவர் பணிமாற்றல் மூலம் முறையான இளநிலை உதவியாளராக பதவி உயர்வில் வேலூர் மத்திய சிறையில் காலியாக உள்ள பணியிடத்தில் பணியமர்த்தப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, பார்வை 4-ல் காணும் 06.05.2022 தேதியிட்ட விண்ணப்பத்தின் மூலம் இம்மத்திய சிறையில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 06.05.2022 பிற்பகல் பணியில் சேர்ந்துள்ளார். இவர் இம்மத்திய சிறையின் பொ.3 இருக்கையில் பணியமர்த்தப்படுகிறார்.

3] செல்வி.ரா.பிரியதர்ஷினி, இளநிலை உதவியாளர் என்பவர் பொ.3 இருக்கை பணிப்பொறுப்புகளை, இவ்விருக்கையினை கூடுதலாக கவனித்து வரும் திரு.E.சீனிவாசன், உதவியாளர் (கிசிஉ இருக்கை) என்பவரிடமிருந்து விடுபாடின்றி முறையாகவும், முழுமையாகவும் பெற்று தொய்வின்றி பணிபுரிந்திட ஆணையிடப்படுகிறது. திரு.E.சீனிவாசன், உதவியாளர் (கிசிஉ இருக்கை) என்பவர் தான் கூடுதலாக கவனித்து வந்த பொ.3 இருக்கை (இளநிலை உதவியாளர்) பணிப்பொறுப்புகளை செல்வி.ரா.பிரியதர்ஷினி, இளநிலை உதவியாளர் என்பவர் வசம் முறையாக, முழுமையாக ஒப்படைக்குமாறு ஆணையிடப்படுகிறது.

4] பணிப்பொறுப்புகளை ஒப்படைத்தலும், ஏற்றலும் தமிழ்நாடு சிறை நடைமுறை நூல் தொகுதி 2 விதி எண்.139,140 மற்றும் 141-ன்படி இருத்தல் வேண்டும்.

5] இச்செயல்முறை ஆணையினை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சிறைக்கண்காணிப்பாளர் (பொ),
மத்திய சிறை, வேலூர்.

பெறுநர்:

1) செல்வி.ரா.பிரியதர்ஷினி, இளநிலை உதவியாளர், மத்திய சிறை, வேலூர்
2) திரு.E.சீனிவாசன், உதவியாளர் (கிசிஉ இருக்கை), மத்திய சிறை, வேலூர்

நகல்- தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

1.காவல் துறை இயக்குநர் / தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறை சென்னை -08
2.சிறைத்துறைத் துணைத்தலைவர் வேலூர் சரகம், வேலூர்.

நகல் - சிறை அலுவலர், மத்திய சிறை, வேலூர்.
நகல் - அலுவலக மேலாளர் / அலுவலக கண்காணிப்பாளர் (கணக்கு பிரிவு), மத்திய சிறை, வேலூர்
நகல் - பொ.3 / க.1 / கிசிஉ - மத்திய சிறை, வேலூர் (நடப்பு எண்ணுடன்)
நகல் - பொ.1 இ.கோ. / கண்.கா. ஆணை புத்தகம்.